வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – சரவணகுமார்

தேதி 17.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இன்று 46 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், வேறு பல திட்டங்களை தொடங்கியும் வைத்தார்.
- குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று முதல் தெலங்கானா மற்றும் ஆந்திராவில் 5 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
- ஒரே நாடு-ஒரே தேர்தல் தொடர்பான மசோதாவை மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.
- இந்திய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டதன் 75ஆவது ஆண்டு தினத்தையொட்டி மாநிலங்களவையில் நடைபெற்று வரும் சிறப்பு விவாதம் இன்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

------------------------------

*பிரதமர் 1 (17)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில், 46 ஆயிரத்து 300கோடி ரூபாய் மதிப்பிலான சாலை,மின்சாரம்,ரயில்வே மற்றும் நீர் தொடர்பான 24 திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார். ராஜஸ்தானில் தற்போதைய அரசு பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கொண்டாட்டங்களில் அவர் பங்கேற்றார். இதில், மத்திய அரசின் 7

திட்டங்களும், மாநில அரசின் 2 திட்டங்களும் அடங்கிய 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 9 திட்டங்களை அவர் தொடக்கி வைத்தார். 35 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான 15 திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், பார்வதி, கலிசிந்த், சம்பல் இணைப்புத் திட்டம் ராஜஸ்தானில் நிலவும் தண்ணீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வை வழங்கும் என்றும் கூறினார். இந்த திட்டம் முதலீட்டை அதிகரிப்பது மட்டுமின்றி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். மத்திய காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியின் போது மாநிலங்களுக்கு இடையே நிலவும் தண்ணீர் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை என்றும் அதனால் அந்தந்த மாநிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<u>பிரதமர் 2 (4)</u>

நிகழ்ச்சியில் ராஜஸ்தான் மாநில ஆளுநர் திரு. ஹரி பாவ் பாக்டே, அம்மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா, மத்திய பிரதேச முதலமைச்சர் திரு. மோகன்லால் யாதவ், மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு. பாட்டீல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

-----------------------------

<u>குடியரசுத் தலைவர் (11)</u>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஆந்திரா மற்றும் தெலங்கானாவில் 5 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். முதலாவதாக ஹைதராபாத் செல்லும் அவர், அங்கு, ராஷ்ட்ரபதி பவனில் தங்கி, தமது அலுவல்களை மேற்கொள்கிறார். அங்கு ஆண்டுக்கு ஒருமுறையாவது குடியரசுத் தலைவர் தமது பணிகளை மேற்கொள்வது கட்டாயமாகும். 1860ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த ராஷ்ட்ரபதி நிலையத்தில் 1955ஆம் ஆண்டு நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அங்கு தங்கி அலுவல்களை மேற்கொண்டார். அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு குடியரசுத் தலைவரும்,

ஹைதராபாத்திற்கு பயணம் செய்து, ஆண்டில் சில தினங்கள் அங்கு தங்குவது வழக்கமாக மேற்கொள்ளப்படுகிறது.

------------------------------

*__இலங்கை அதிபர் 1 (18)__*

இந்தியாவும், இலங்கையும் எதிர்காலத்திற்கான கூட்டு ஒற்றுமையை நிலைநாட்டும் வண்ணம் ராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடையே படகுப் போக்குவரத்தை மேற்கொள்ளவும், மீனவர்களின் பிரச்சனையில் நிலையான நீடித்த தீர்வு காணவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 3 நாள் பயணமாக இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகே இந்தியா வந்துள்ளார். புதுடெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில பிரதமர் திரு. நரேந்திர மோடி, இலங்கை அதிபருடன் நேற்று பேச்சு வார்த்தை நடத்தினார். கடந்த சில ஆண்டுகளாக வலுவடைந்துள்ள இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர் ஆலோசனைகள் மேற்கொண்டனர். பரஸ்பரம் இருதரப்புக்கும் பயனுள்ள விஷயங்கள் குறித்து இருதலைவர்களும் விவாதித்தனர். இந்த பேச்சு வார்த்தையின் முடிவில், இரட்டை வரி விதிப்பை தவிர்ப்பதற்கும், இலங்கை குடிமைப்பணி அதிகாரிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகியவை குறித்து 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் இருநாட்டு தலைவர்கள் முன்னிலையில், பரிமாறிக் கொள்ளப்பட்டன. அதனை தொடர்ந்து இருதலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய பிரதமர் திரு. நரேந்திர

__இலங்கை அதிபர் 2 (13)__

மோடி, இலங்கை அதிபரின் முதல் வெளிநாட்டுப் பயணம் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். இலங்கைக்கு இந்தியா இதுவரை 5 பில்லியன் டாலர் அளவிற்கு கடன் மற்றும் மானிய உதவி வழங்கி உள்ளதை அவர் சுட்டிக் காட்டினார். ராமேஸ்வரம்-தலைமன்னார் இடையே படகுப் போக்குவரத்தை தொடங்குவது குறித்து

கூட்டாக முடிவெடுத்திருப்பதாக பிரதமர் தெரிவித்தார். மீனவர்களின் வாழ்வாதாரம் குறித்த பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதாகவும், இந்த விஷயத்தில் மனிதாபிமான அணுகுமுறை அவசியம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய இலங்கை அதிபர், இருநாடுகளுக்கும் இடையே பெரிய பிரச்சனையாக இருக்கும் மீனவர்கள் பிரச்சனைக்கு நீடித்த நிலையான தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறினார். மீன்பிடித் தொழிலுக்கும், மக்களுக்கும் பாதகமான நடைமுறைக்கு பிரதமர் முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

-----------------------------

***<u>ஒரே நாடு-ஒரே தேர்தல் (18)</u>***

ஒரே நாடு-ஒரே தேர்தல் தொடர்பான மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், அரசியல் அமைப்பு மசோதா 2024 மற்றும் யூனியன் பிரதேசங்கள் சட்டங்கள் திருத்த மசோதா ஆகியவற்றை இன்று அவையில் அறிமுகம் செய்து வைத்தார். இந்த மசோதாவிற்கு ஆதரவாக 269 உறுப்பினர்களும், எதிராக 198 உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர். காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி, திமுக, சிவசேனா, சிபிஎம் மார்க்சிஸ்ட் மற்றும் பிற எதிர்கட்சிகள் இம்மசோதாவை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த மசோதாக்கள் அரசியல் அமைப்பின் அடிப்படை கட்டமைப்பை மீறுவதாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மணீஷ் திவாரி கூறியுள்ளார். இந்தியா மாநிலங்களின் ஒன்றியம் என்றும், இந்த மசோதாக்களை திரும்பப் பெற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இதனை தொடர்ந்து, ஒரே நாடு-ஒரே தேர்தல் திட்டம் எந்த தனி மனிதருக்கோ, கட்சிக்கானதோ அல்ல, நாட்டுக்கானது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து

மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழுவிற்கு அனுப்புவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

------------------------------

<u>*ஜே.பி நட்டா* 1(16)</u>

இந்திய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டதன் 75ஆம் ஆண்டை ஒட்டி, மாநிலங்களவையில் நடைபெற்று வரும் சிறப்பு விவாதம் இன்றும் தொடர்கிறது. விவாதத்தின் நிறைவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அத்றகு பதில் அளித்து பேச உள்ளார். விவாதத்தில் பங்கேற்று பேசிய மத்திய அமைச்சர் திரு. ஜே.பி நட்டா, அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டதன் 75ஆம் ஆண்டு கொண்டாட்டம், நமது அரசியல் அமைப்பு மீதான நற்பண்பை வெளிப்படுத்துவதாக தெரிவித்தார். இதனை, நம் நாட்டின் இலக்கை அடைவதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்தியா உலகின் மிகப் பெரிய சக்தி என்று கூறிய அவர், ஜனநாயகங்களின் தாயாகவும் இந்தியா திகழ்வதாக அவர் பெருமிதம் தெரிவித்தார். முன்னதாக, நேற்று விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், நாட்டில் அரசியல் சாசனம் காலங்களை கடந்து உறுதியாக இருப்பதாக தெரிவித்தார். பெண்களின் நலனுக்காக எப்போதும் பாரதீய ஜனதா கட்சி பாடுபட்டு வருவதாகவும் கூறிய அவர், மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்தார்.

<u>*ஜே.பி நட்டா* 2 (4)</u>

விவாதத்தில் பங்கேற்று பேசிய மாநிலங்களவை எதிர்க் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜூன கார்கே, அரசியல் சாசனத்தின் மதிப்பை குறைக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசு ஈடுபட்டதாக தெரிவித்தார். ஏழைகளின் நலனுக்காக காங்கிரஸ் அரசு கொண்டு வந்த பலத் திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

------------------------------

<u>*தர்மேந்திர பிரதான்*</u> (9)

நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்த அரசு உறுதிப்பூண்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 8 ஆண்டுகளில் ஒரு குழந்தைக்கான செலவு 130 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றும், கடந்த 2013-14ஆம் ஆண்டில் 10 ஆயிரத்து 780 ஆக இருந்த தொகை, தற்போது 2021-22ஆம் ஆண்டில், 25 ஆயிரத்து 43 ரூபாயாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார். பிரதமரின் போஷன் அபியான் திட்டத்தின் கீழ், அரசு 1 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

------------------------------

<u>*ஃபிட் இண்டியா*</u> (13)

ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், புதுடெல்லியில் ஃபிட் இண்டியா இயக்கத்தின் சார்பில், சைக்கிள் பேரணிக்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த சைக்கிள் பேரணியை, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கொடியசைத்து தொடக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், காற்றின் தரக் குறியீட்டை மேம்படுத்துவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவதன் மூலம், ஆரோக்கியமான மற்றும் பசுமையான இந்தியாவை உருவாக்க முடியும் என்று தெரிவித்தார். தினமும் ஒருமணி நேரமாவது சைக்கிள் ஓட்டுதல் போன்ற உடல் செயல்பாடுகளில் மக்கள் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்த இயக்கம் கடந்த 2019ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திரமோடியால் தொடங்கப்பட்டதாகும. இந்த நிகழ்ச்சி நாடு முழுவதும் சுமார் ஆயிரம் இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.

------------------------------

<u>*ரங்கசாமி*</u> <u>(9)</u>

புதுச்சேரி பொலிவுறு நகர திட்டத்தின் கீழ், அண்ணா திடலில் 9.6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பணியை முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது, கட்டுமான பணிகளை விரைந்து முடித்து, விளையாட்டு அரங்கத்தையும், கடைகளையும், மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அவரது இந்த ஆய்வின் போது பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர், புதுச்சேரி பொலிவுறு நகர வளர்ச்சி நிறுவனத்தின் இணை தலைமை செயல் அலுவலர், புதுச்சேரி நகராட்சி ஆணையர் ஆகியோர் உடன் இருந்தனர்.

------------------------------

<u>***தலைகவசம் (7)***</u>

புதுச்சேரியில், வரும் ஜனவரி 1ஆம் தேதி முதல் தலைகவசம் அணிவது தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படும் என்று போக்குவரத்து காவல் துறை அறிவித்துள்ளது. இதற்காக பொது மக்கள் மற்றும் கல்லூரி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் போக்குவரத்து காவல் துறை பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இதுகுறித்து கூடுதல் தகவல்களை தருகிறார் புதுச்சேரி போக்குவரத்து காவல் ஆய்வாளர் திரு. கோகுலகிருஷ்ணன்.....

------------------------------

<u>***துளசி கவுடா***</u> <u>(8)</u>

பத்ம விருது பெற்ற கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சுற்றுச் சூழல் ஆர்வலர் துளசி கவுடாவின் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில் விடுத்துள்ள செய்தியில், இயற்கையை வளர்ப்பதற்கும், ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை நடுவதற்கும், சுற்றுச்

சூழலை பாதுகாப்பதற்கும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்ததாக கூறினார். அவரது பணி தொடர்ந்து பல இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

-----------------------------

*சிவராஜ் சிங் சவுகான்* (16)

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு 6 அம்ச உத்திகளை தயாரித்துள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். மக்களவையில் இன்று, கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்து பேசிய அவர், கடந்த 2002-2003ஆம் ஆண்டில், விவசாயிகளின் மாத வருமானம் 2 ஆயிரத்து 115 ரூபாயாக இருந்ததாகவும் இது, 2018-2019ல் 10 ஆயிரத்து 218 ரூபாயாக அதிகரித்தது என்றும் கூறினார். உற்பத்தியை அதிகரிப்பது, உற்பத்தி செலவை குறைப்பது, விளைபொருட்களுக்கு நியாயமான குறைந்தபட்ச விலையை உறுதி செய்தல், இயற்கை பேரிடர்களால் ஏற்படும் இழப்பை ஈடு செய்தல், விவசாயத்தை பல்வகைப் படுத்துதல் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல் போன்றவையே இந்த 6 அம்ச உத்திகளாகும் என்றும் அவர் தெரிவித்தார். இதுதவிர, விவசாயிகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன்கள் மற்றும் உரங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு 2 லட்சத்து 14 ஆயிரம் கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

-----------------------------

*வானிலை (4)*

தெற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நாளை வலுவடையும் என்றும், இதன் காரணமாக, கடலூர், விழுப்புரம் உட்பட 4 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.